செ.வெ.எண்:11 நாள்: 07.09.2020

# அரியலூர் மாவட்டம்

# 8 ஆசிரியர்களுக்கு டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருதினை (நல்லாசிரியர் விருது) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, ஆண்டுதோறும் கல்விப் பணிகளில் சிறப்பாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு டாக்டர்.ராதாகிருஷ்ணன் விருதுக வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (05.09.2021) நடைபெற்ற விழாவில், கீழப்பழூர் அரசு ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் 7 ஆசிரியர்கள் என மொத்தம் 8 நபர்களுக்கு டாக்டர்.இராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருதினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.க.சொ.க.கண்ணன்** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில், கீழப்பழூர் அரசு ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் முனைவர்.க.மொழியரசி அவர்களுக்கு ரூ.10,000/- பரிசுத்தொகையுடன் பாராட்டுச்சான்றிதழும், திருமானூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி.தி.இன்பராணி, சின்னவளையம் அரசு உயர்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் திரு.தி.பாண்டியன், ஏலாக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி ஓவிய ஆசிரியர் திரு.பி.அழகுதுரை, மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் திரு.அ.அந்தோணிசாமி செழியன், அண்ணிமங்கலம் ஆதிதிராவிடர் நலத்தொடக்க பள்ளி தலைமையாசிரியர் திருமதி.ப.பிரபா, மணப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தொடக்க பள்ளி தலைமையாசிரியர் திரு.சிவமூர்த்தி, புதுச்சாவடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு.இலா.செங்குட்டுவன் ஆகியோர்களுக்கு டாக்டர்.இராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருதுகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கல்வி வளர்ச்சியில் தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்க பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், கல்வி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் ஆசிரியர் பெருமக்களுக்கு டாக்டர்.ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான இன்று அவர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

மேலும், கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக கருதப்படும் நமது மாவட்டத்தை கல்வி வளர்ச்சியில் மேம்பட அனைத்து ஆசிரியர்களும் சிறப்பாக பணியாற்ற வேண்டும். மேலும், மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் திறனை மேம்படுத்தும் வகையில் பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசின் மூலம் கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இதுபோன்ற முன்னோடி திட்டங்களை பயன்படுத்திக்கொண்டு நமது மாவட்டத்திலிருந்து அதிகபடியான மாணவர்கள் உயர்பதிவிகளில் பணியாற்ற உறுதுணையாக இருக்க வேண்டும். கொரோனா காலத்தில் கடுமையான சூழலுக்கு இடையே பணியாற்றி வரும் ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்கள் மற்றும் தங்கள் நலனில் மிகுந்த அக்கரைக்கொண்டு கவனமுடன் கல்வி பணியாற்றிட வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியலிருந்து 3 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் மற்றும் 19 பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்களும் என 22 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 46 ஆயிரத்து 300 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.பொ.சந்திரசேகர், முதன்மை கல்வி அலுவலர் திரு.எம்.இராமன், மாவட்ட கல்வி அலுவலர் திருமதி.பெ.அம்பிகாபதி, பள்ளித்துணை ஆய்வாளர் பழனிசாமி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**